# நிலாவின் நூலகம் - 10

- ***காலத்தின் தேவை கருதி ஈழத்தமிழர்களுக்கு விழிப்புணர்வு பதிவு***

**மீள்பதிவு**.

காலத்தின் தேவை கருதி ஈழத்தமிழர்களுக்கு விழிப்புணர்வு பதிவு

இது ஒரு மீள்பதிவே. இந்தியாவில் ஈழத்தமிழர்களின் மீதும் அவர்களது அரச அறிவியல் யுத்தத்தையும், செயற்பாட்டையும் முடக்கும் விடயங்கள்.

ஏன் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற ஆயுதப் போராட்டம் மௌனித்து 15வருடங்கள் கடந்த பின்னரும் இந்திய மத்திய அரசு தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற இயக்கத்தின் மீது தடையைப் போடவும், உலக நாடுகள் அவற்றை பின்பற்றவும் காரணமாக உள்ள காரணிகளை அரச அறிவியல் விஞ்ஞானத்தின் பார்வையுடனான அலசல்

இது நிலாவாகிய எனது அனுபவப் பகிர்வே. இதனை ஏற்பதும் மறுப்பதும் வாசகர்களின் அரச அறிவியல் விஞ்ஞானத்தின் அறிவியல் மட்டத்தை வைத்தே அளவீடு செய்யலாம்

தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கும்(இலங்கை) தமிழ்நாட்டு விடுதலைப் படைக்கும் (இந்தியா) உள்ள வித்தியாசம் தெரியாதவர்களால் ஈழத்தமிழர்கள் படும் இன்னல்கள் சொல்லில் அடக்கிட முடியாதது.

ஈழத்தமிழர்களில் பலருக்கு, ஈழத்தமிழர்களாகிய நாம் இலங்கையில் ஏன் இனவழிப்புக்கு உள்ளாக்கப்பட்டோம்? ,ஏன் இன்றும் தொடர்ச்சியாக இனவழிப்பிற்கு உள்ளாக்கப்படுகின்றோம் எனத் தெரியாது.

இவ்வாறாக ஈழத்தமிழர்கள் தமது பிரச்சனையையே என்னவென்று ஆழமாக தெரியாமல் உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழுகின்றனர்.

ஈழத்தமிழர்களுக்கு தமிழ்நாட்டு விடுதலைப் படை என்றால் என்ன? என்றும் அதற்குள் உள்ள பிரிவுகள் எது என்றும் அவர்களின் நோக்கம் என்னவென்றும் தெரிந்திருக்குமா? என்றால் பதில்
நிச்சயமாக இல்லை அல்லது தெரியாது என்பதுதான்.

ஏனெனில் ஈழத்தமிழர்களில் மிக மிக சொற்பமானவர்களே இந்தியா வந்து நின்று புலம்பெயர்ந்தவர்கள் ஆவர்.

இந்தியா வந்து தங்கிவிட்டு புலம்பெயர்ந்தவர்களும் தமது குடும்பம்,வாழ்கை முன்னேற்றம் என சிறுவட்டத்தில் வாழ்ந்துவிட்டு புலம்பெயர்ந்தவர்களாவர்.

இந்தியாவில் தங்கியுள்ள ஈழத்தமிழர்களில் 98 வீதத்திற்கும் மேலானவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்புக்கு எதிராக இருந்தவர்களும், அவர்களின் உறவுகளும் நண்பர்களும் தான். இவர்களும் தமது நலனைப் பேண விடுதலைப்புலிகள் என்ற அமைப்பின் மீதிருந்த வன்மத்தை ஈழத்தமிழர்களாகிய அரசியல் உரிமைப் போராட்டத்தின் மீது கக்கியவர்களே.

இந்தியாவில் உள்ள ஈழத்தமிழர்களில், மீதமான இரண்டு வீதத்தில் 98 வீதமானவர்கள் விடுதலைப்புலிகளுக்கு தேவையான மருத்துவ பொருட்களை உடைகளை வழங்கிய வியாபாரிகள்.இவர்களுக்கு விடுதலைப்புலிகள் அமைப்பு இருந்தவரை வியாபாரம் கிடைத்தது. இவர்களுக்கு இப்போது அன்றைய வியாபாரம் இன்மையால் அன்றைய நாளில் இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளில் இருந்த வியாபாரத் தொடர்பை பேணியவர்களின் பெயரைச் சொல்லி பிழைப்புவாதம் நடத்துகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள தமிழீழ விடுதலைக்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருந்தவர்களில் 90 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் வியாபாரிகள். இவர்களே அதிகளவில் தமிழ்நாட்டு விடுதலைப் படையில் இருந்தவர்களாகவும் உள்ளனர்.

இந்த வியாபாரிகளிடம்

1) தர்மம்,
2) நியாயம்
3), ஒழுக்கம்
4) பெண்களை மதிக்கும் மாண்பு
5) பொய் பேசக் கூடாது

என்ற சிந்தனைவாதம் இருக்கவில்லை.

மேலும் இவர்களிடம் பொய்களை கூட உண்மை என பேசும் வல்லமை பெற்றவர்களாகவும் இவர்கள் தம்மை வளர்த்து இருந்தனர்.

மிக மிக மோசமான இந்திய அரச எதிர்ப்பாளர்களாக இருந்தனர். தமிழீழ விடுதலைப் போர் முடிவில் இலங்கையில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயருடன் தப்பி வந்ததாக சொல்லப்பட்ட பல சிங்கள

புலனாய்வாய்வாளர்களை தமிழ்நாட்டு விடுதலைப் படையை சார்ந்தவர்கள் தெரிந்தும் தெரியாமலும் அணைத்துக் கொண்டனர். இதன்போதுதான் 2009 மே பின்னர் சிங்கள புலனாய்வாய்வாளர்களின் வழிநடத்தலில் தமிழ்நாட்டில் இருந்த ஈழத்தமிழர்களின் மீதான விசுவாசமானது ஈழத்தமிழர்களுக்கு எதிராகவும், இந்திய தேசிய பாதுகாப்பிற்கு எதிராகவும் திசை திருப்பப்பட்டது. இதனை சரியாக கணிக்கக் கூடியதாக அன்றைய காலமும் சூழலும் தமிழக அதிகாரத்திற்கு இடமளிக்கவில்லை போலும். தமிழ்நாட்டு விடுதலைப் படையில் 10 வீதமானவர்கள் உண்மையானவர்களாக இருந்துள்ளனர். இவர்களும் சரியான வழிகாட்டுதல் இன்மையால் இந்திய எதிர்ப்பாளர்களாக மாறி உள்ளனர். இவர்களுக்கு இந்திய வரலாற்றை அரசியலை ஆழமாக அரச அறிவியலாக கற்றுக் கொடுக்கும் ஆசான்களை காண முடியாத சூழலைக் கண்டோம்.

தமிழ் நாட்டு விடுதலைப் படையினருடன், ஈழத்தமிழர்களின் பெயருடன்,தமிழீழ விடுதலைப் புலிகளின் பெயருடன் வந்த சிங்கள புலனாய்வாய்வாளர்கள் தமது விருப்பமான இந்திய எதிர்ப்புவாதத்தை இலகுவாக தமிழ்நாட்டில் விதைத்துள்ளனர். இந்த எதிர்ப்புவாதமே 2009 பின்னர் ஈழத்தமிழர்களிடையே ஆழமாக விதைக்கப்பட்டு இன்று மரமாகிவிட்டது .

குறித்த இந்த இந்திய எதிர்ப்புவாதமானது, ஈழத்தமிழர்களிடையே மிக ஆழமாக அன்று விதைக்கப்பட்டதும், இன்றுவரை தொடர்ச்சியாக விதைக்கப்படுவதும் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பிற்கு எத்தகைய அச்சுறுத்தலானது, என்ற கோணத்தில் இந்திய அரசின் முடிவெடுக்கும் வர்க்கமானது சிந்திக்க முடியாத அளவில் சிங்கள அரசின் இராசதந்திர நகர்வுகள் மிக மிக வலுவாக இந்திய அதிகார மையத்தை நோக்கி மிக மிக ஆழமாகவும் அகலமாகவும் செய்யப்பட்டு விட்டது ..

ஈழத்தமிழர்களாகிய எம்மிடையே ஈழத்தமிழர்களின் நலனை முன்னிறுத்தி செயற்படுபவர்களை பார்த்து RAW மேனியா பார்வையுடன் ஈழத்தமிழர்களே பார்க்கின்ற, அல்லது புரிகின்ற நிலை 99 வீதமான ஈழத்தமிழர்களிடையே இருப்பது போலவே,

ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமை சார்ந்த பிரச்சனையை தமிழ்நாட்டு விடுதலைப்படையுடன் இணைத்துப் பார்க்கின்ற குணமானது 99 வீதமான இந்திய அதிகார மையத்திடம் உண்டு. இதுவே இந்தியாவில் உள்ள நிலைப்பாடாக உள்ளது.

மிக ஆழமான, அகலமான இந்திய அதிகார மையத்தின் பார்வைக்கும், ஈழத்தமிழர்களின் பார்வைக்கும் உள்ள இடைவெளியை இந்தியாவின் எதிரிகளும் ஈழத்தமிழர்களின் எதிரிகளும் தமக்கு சாதகமாக மாற்றியமைத்து உள்ளான்.

இவ்வாறாக ஏற்கனவே, இரு எதிர் எதிர் துருவங்களில் உள்ள இந்திய அதிகார வர்க்கத்தின் பார்வையையும், ஈழத்தமிழர்களின் பார்வையையும் மாற்றியமைத்து ஒரே திசைக்கு திருப்பும் நோக்குடனேயே எமது அரச அறிவியலான செயற்பாட்டானது அமைந்தது. எமது பயணப் பாதையானது மிக மிக துன்பமான கண்ணீர்கள் நிறைந்த, வலிகளை தருகின்ற, முட்கள் பாதங்களை குத்திக் கிழிக்கின்ற நாளும் துன்பத்தையும் அவமானங்களையும் சந்திக்கின்ற பயணமாக உள்ளது.

சில சமயங்களில் மிக மோசமான தன்மானத்தை சுய ஒழுக்கத்தை கேவலமாக சித்தரிக்கின்ற வசைபாடல்களை சுமக்கின்ற கட்டுக்கதைகளை எழுதுகின்றவர்களை தாண்டிச் செல்கின்ற பாதையாகவும் உள்ளது.

SMALL DROPS என்ற எமது அமைப்பில் உள்ளவர்கள் பலரும் மேற்குறித்த வலிகளை முன்கூட்டியே கணித்து தான் எமது போராட்டத்தை தொடங்கினோம். இதனால் எமக்கு இந்திய ,ஈழத்தமிழர்களின் எதிரிகளால் எம்மீது நடத்தப்படுகின்ற வலிகள் புதியதல்ல. எம்மை அசைக்கக் கூடியவையும் அல்ல.

SMALL DROPS என்ற அமைப்பின் நோக்கம் தமிழீழ மக்களின் விடிவிற்கு அரச அறிவியலான தீர்வு அவசியமானது என்பதும் அது இன்றைய கொரனாவிற்கு பின் பின்னரான காலத்தில் இந்தியாவின் தேசியப் பாதுகாப்பிற்கு தமிழீழமே தீர்வு என்றும் ஆணித்தரமாக அரச அறிவியலான பாதையில் நகர்கின்றது ..

**நன்றி.**
**வணக்கம்.**

**காவியா (நிலா)**
**23/10/2023**
**இந்தியா**

........................................................................